[1972 ஆகஸ்ட் 19

### தஞ்சாவூர் மாவட்ட முப்படை வாரியம்.

**திரு சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்ட முப்படை வாரியத்தின் துணைத் தலைவருக்கு அலுவலக இட வசதியும், பொறுப்புகளும் வழங்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இந்நிலை எவ்வளவு நாளாக இருந்து வருகிறது ?

(உ) இது குறித்து எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ), (இ) & (உ) தஞ்சாவூர், முப்படை மாவட்ட வாரியத்தின் துணைத்தலைவர் 17—4—1971 அன்று நியமிக்கப்பட்டார். போதிய கட்டிட வசதி இல்லாததால் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகமும், தஞ்சாவூர் முப்படை மாவட்ட வாரியமும் இயங்கிவந்த ஒரே கட்டிடத்தில் அவருக்கிடம் ஒதுக்கப்பட்டது. அவரிடம் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டன. தஞ்சாவூர் முப்படை மாவட்ட வாரியத்தின் கட்டிட அமைப்பு மாற்றப்பட்டபின் 15—10—1972 லிருந்து துணைத்தலைவருக்கு அந்தக் கட்டிடத்திலேயே ஒரு தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

* 121 *Q.*—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that relevant application forms for the use of Ex-servicemen are not available with the District Soldiers', Sailors' and Airmen's Board, Thanjavur district for a long time;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

**திரு சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நீண்ட காலமாகத் தஞ்சை மாவட்ட முப்படையினர் வாரியத்தில் முன்னாள் படைவீரர் பயன்படுத்தத் தக்க விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :** (அ) & (இ) எழுது பொருள் கிடைக்கப்பெறாததால், தஞ்சாவூரில் வாழும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு, தஞ்சாவூர் மாவட்ட தரை, கப்பல் விமானப்படை வாரிய நிறுவனத்தால் தேவையான கடன் படிப்பு உதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் கொடுக்க இயலவில்லை.

(உ) இது இணைப்பு நிதியின் பரிசீலனைக்கு கொண்டு வரப்பட்டது. இணைப்பு நிதியின் செயலாளர் அரசு மேலாண்மை குழுவின் ஒப்புதல் பெற்று, அரசு அச்சகத்தில் படிவங்கள் அச்சடிக்கப்பெற்று, 23—11—1971 அன்றே தஞ்சாவூர் மாவட்ட தரை, கப்பல், விமானப்படை நிறுவனம் உள்பட எல்லா மாவட்ட முப்படை வாரியங்களுக்கும் படிவங்கள் அனுப்பப்பட்டு விட்டன. இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனி நடைபெறாமல் இருக்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி

MR. CHAIRMAN : I have received a message from the Governor recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Bill, **1972.**